# 20 தாவீது

**படைப்பாளராகிய கடவுள் எமது ஆயர் (மேய்ப்பர்) என்பதை நாம் அறிவோம். நாம் நன்கு அறிந்த திருப்பாடல் 23 ஆயராக இருந்த தாவீதினால் எழுதப்பட்டது. என்பதை நாம் ஏற்றுக்கொள்வோம். அவ்வாறு பொருளுள்ள திருப்பாடலை எழுதுவதற்கு வேண்டிய திறமையை தாவீது எப்படிப் பெற்றார். தனது மேய்ப்புப் பணியில் கடவுளைப்பற்றியஅனுபவங்கள் பலவற்றைப் பெற்றதனாலேயாகும். கடவுளில் முழு நம்பிக் கையை வைத்து வளர்ந்த மேய்ப்பனாகிய தாவீது, மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து துணிச்சல் மிகுந்த இஸ்ரயேலின் அரசனாக திருப்பொழிவு பெற்றார்.**

பெத்லகேமில் வாழ்ந்த மந்தை மேய்ப்புத் தொழிலைச் செய்த ஈசாய் என்னும் இஸ்ரயேலனுக்கு எட்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களுள் இளையவனான தாவீது, சிறுவயதுமுதல் தனது தந்தையின் மந்தையை மேய்த்து வந்தார். சிறுவயதுமுதல் கடவுளை நேசித்த தாவீது, மந்தைகளை சமவெளியில் மேய்க்கும்போது அவற்றையும் வனவிலங்குகளிலிருந்து காப்பாற்ற துணிவுடன் செயல்பட்டார். இந்த அனுபவத்தின் மூலம் தாவீது கடவுளின் அன்பைப் பற்றியும் நன்கு விளங்கிக் கொண்டான். கற்களையும் கவணையும் கொண்டு வனவிலங்குகளை விரட்டியடிப்பதற்கு குறிதவறாது செயல்படும் திறமையைக் கொண்டிருந்தார். அத்தோடு யாழ் மீட்டுவதிலும் கைதேர்ந்தவனாயிருந்தான். கடவுளில் மிகுந்த நம்பிக்கை வைத்து கடவுளுக்கு அஞ்சிவாழ்ந்தார்.

ஈசாயின் மூத்தபுதல்வர்கள் மூவர் சவுலின் படையில் சேர்ந்திருந் தார்கள். ஏலா பள்ளத்தாக்கில் பெலிஸ்தியருடன் அவர்கள் போரிட்டுக்கொண்டு இருக்கும் போது ஒருநாள் தனது புதல்வர்களைக் குறித்த தகவலைப் பெற்றுவரும்படி ஈசாய் தாவீதை அனுப்பினார்.அங்கு பெலிஸ்தியரின் படையையும், இஸ்ரயேலர் போரிட்டுக்கொண்டு இருப்பதையும் தாவீது கண்ணுற்றார். பெலிஸ்தியரின் படையில் இருந்த கோலியாத்து என்னும் வீரன் இஸ்ரயேலரை நித்தமும் அச்சுறுத்தி,

அவர்களுடைய கடவுளை ஏளனப்படுத்திக் கொண்டு இருந்தான். தாவீது இதை சகித்துக்கொள்ளமுடியாமல் கோலியாத்து என்னும் வீரனுக்கு சவால்விட தீர்மானித்தார். தாவீது அங்கிருந்தவர்களிடம் வினவியதையும் அவர் கூறியவற்றையும் சவுலுக்கு அறிவித்தார்கள்.

**1 சாமுவேல் 17: 34-40, 45, 47**



தாவீது : அரசனே! அவன் பொருட்டு யாருடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை. உம் அடியானாகிய நானே சென்று அந்த பெலிஸ்தியனோடு போரிடுவேன்.

சவுல் : இந்தபெலிஸ்தியனை எதிர்த்துப் போராட உன்னால் இயலாது நீயோ இளைஞன், ஆனால் அவனோ தன் இளவயது முதல் போரில் பயிற்சி உள்ளவன்.

தாவீது : உம் அடியானாகியநான் என் தந்தையின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது சிங்கமோ அல்லது கரடியோ மந்தையில் புகுந்து ஆட்டைப் பிடித்துக் கொண்டு ஓடினால், நான் பின் தொடர்ந்து ஓடி, அதைஅடித்து, அதன் வாயினின்று ஆட்டை விடுவிப்பேன். அது என் மீது பாய்ந்தால் அதன் தாடியைப் பிடித்து நன்றாக அடித்துக் கொல்வேன்.

இவ்வாறாக கோலியாத்தின் சவாலை ஏற்றுக்கொண்ட தாவீதுக்கு சவுல் தனது உடைகளை அணிவித்தார். தாவீது தான் அவற்றிற்குப்பழக்கப் படாததால் அவற்றை களைந்துவிட்டார். தாவீது தம்கோலை கையில் எடுத்துக்கொண்டு, ஆற்றங்கரையில் வழுவழுப்பான ஐந்து கூழாங்கற்களையும் கவணையும் கையில் எடுத்துக்கொண்டார். கோலியாத்தின் சவாலைக் கண்டு முழு இஸ்ரயேல் படையும் அஞ்சி நின்றாலும் தாவீது பயமற்றவராக இருந்தார். கடவுள் மீது கொண்டிருந்த நம்பிக்கையினிமித்தம் தாவீது பயமற்றவராக கோலியாத்து என்னும் வீரன் முன் நின்றார்.

பெலிஸ்தியனான கோலியாத்து தாவீதை ஏளனம் செய்து கொண்டு சிறிதுசிறிதாக முன்நோக்கி நகர்ந்தான். தனதுகரங்களால் சிறுவனான தாவீது சந்திக்கப்போகும் அழிவைக் குறித்து பெருமைப்பட்டுக்கொண்டான்.

கோலியாத்து : ''நீ கோலுடன் என்னிடம் வர நான் என்ன நாயா? அருகேவா! வானத்துப் பறவைகளுக்கும் வனத்து விலங்குகளுக்கும் உன் உடலை இரையாக்குவேன்''.

தாவீது : ''நீ வாளோடும் ஈட்டியோடும் எறி வேலோடும் என்னிடம் வருகிறாய் நானோ நீ இகழ்ந்த இஸ்ர யேலின் படைத்திரளின் கடவுளாகிய,படைகளின் ஆண்டவர் தம் பெயரால் வருகிறேன். இன்றே ஆண்டவர் உன்னை என் கையில் ஒப்புவிப்பார் நான் உன்னை வீழ்த்தி உன் உடலைத் துண்டிப்பேன் பெலிஸ்தியரின் பிணங்களை வானத்துப் பறவைக ளுக்கும் பூவுலக விலங்குகளுக்கும் கையளிப்பேன் இஸ்ரயேலரிடையே கடவுள் இருக்கிறார் என்பதை உலகிலுள்ள எல்லாரும் இதனால் அறிந்து கொள்வர். மேலும், ஆண்டவர் வாளினாலும் ஈட்டியினாலும் மீட்கின்றவர் அல்லர் என்று இந்த மக்கள் கூட்டம் அறிந்து கொள்ளட்டும் ஏனெனில் இது ஆண்டவரின் போர்! அவரே உங்களை எங்கள் கையில் ஒப்புவிப்பார்.

தாவீதின் வார்த்தைகளால் ஆத்திரமுற்ற கோலியாத்து, தாவீதைக் கொல்ல வேண்டும் என்ற உத்வேகத்தோடு முன்நோக்கி வேகமாக நடந்தான்.தாவீது பொறுமையோடு தனது பையிலிருந்து ஒரு கல்லை எடுத்துஅதனைகவணில்வைத்துபெலிஸ்தியனின்நெற்றியைக்குறிபார்த்து அதை சுழற்றி எறிந்தார். அந்தக் கல் அவனது நெற்றியில் பதியவேஅவன் தரையில் முகம் குப்புற விழுந்தான். இவ்வாறு கோலியாத்து தாவீதுக்கும் அவருடைய கடவுளுக்கும் எதிராக உரைத்த ஏளனச் சொல் முடிவுற்றது.

**நாம் சிறுவயது முதல் அன்புள்ளவர்களாகவும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாகவும் வளர வேண்டும். அப்போது பயமற்றவர்களாக சவால்களை மேற்கொள்ளலாம்.**

போருக்குத் தேவையான அனைத்து கவசங்களும் காணப்பட்ட பெலிஸ்தியவீரன் தன்னில் முழு நம்பிக்கையையும் வைத்திருந்தான். வெளிவாரியான கவசங்களை தாவீது களைந்து மேய்ப்பனைப் போல் சர்வவல்லமையுள்ள கடவுளில் நம்பிக்கைவைத்தார்.

**தனதுசக்தியையும் திறமையையும் காண்பித்து புகழ் பெறுவதையே கோலியாத்து விரும்பினான். தாவீது கடவுள் மீது தனது முழு நம்பிக்கையையும் வைத்தார்.**

கோலியாத்தின் நோக்கம் மக்கள் வாழ்வை அழிப்பதாகும் தாவீது சவாலை எதிர்நோக்கும் போது மக்கள் வாழ்வைக் காப்பாற்றுவதே நோக்கமாக இருந்தது.

**தாவீது தீமையை மேற்கொள்வதற்கு கடவுளின் வல்லமையை முழுமையாக நம்பியிருந்தார்**

**கடவுளின் பிள்ளையாகிய நீர் கடவுளுக்கு செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. அதற்காகப் பல்வேறு திறமைகளை கடவுள் உமக்குத் தந்திருக்கிறார். அவற்றை வளர்த்து, துணிவுடன், கடவுளுக்குக் கீழ்படிந்து வாழ்வது சிறந்தது.**

மனனவசனம்:
திருப்பாடல் 111:7

**அவர்தம் ஆற்றல்மிகுசெயல்கள் நம்பிக்கைக்குரியவை நீதியானவை அவர்தம் கட்டளைகள் அனைத்தும் நிலையானவை**

செயற்பாடு

1. நீர் பெற்றுள்ள சிறப்பான திறமை ஒன்றைத் தெரிவு செய்து, அதைக்கடவுளின் மகிமைக்காக
   i) உமது திருச்சபையில்
   ii) உமது சமூகத்தில்
   iii) உமது குடும்பத்தில்
   பயன்படுத்தி எவ்வாறு சேவை செய்வீர் என்பதை குறிப்பிடுக.

2. இந்தப்பாடத்தில் தரப்பட்டுள்ள உரையாடலைப் பயன்படுத்தி வகுப்பில் நடித்துக்காட்டவும்.